உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 06.07.2026 • மலர் 04 • இதழ் : 187 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 06.07.2026 • Vol : 04 • Issue : 187 • Page : 4 • Rs. 5/-

# புதிய செமிகண்டக்டர் தொழிற்சாலை

## குஜராத்தில் பிரதமர் மோடி திறந்து வைத்தார்



காந்திநகர், ஜூலை 6

பிரதமர் மோடி குஜராத்தின் சனந்தில், சிஜி செமி அவுட்சோர்ஸ்டு செமிகண்டக்டர் அசெம்பிளி அண்ட் டெஸ்ட் (OSAT) என்ற செமிகண்டக்டர் தொழிற்சாலையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை குறித்து பிரதமர் மோடி பேசியதாவது:

தனது இலக்குகளை அடைவதில் தேசத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு இந்த தொடக்க விழா ஒரு சான்றாக விளங்குகிறது. நாடு தனது வலுவான தீர்மானங்களை எவ்வித தயக்கமுமின்றி உறுதியான செயல்களாக தொடர்ந்து மாற்றி வருகிறது.

நாட்டை மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய மையமாக மாற்றுவது அரசின் முக்கிய நோக்கம். உள்நாட்டு சிப் வடிவமைப்பு, பத்தி என்ற நோக்கமே, இந்த மூன்றாவது பெரிய ஆலையில் வணிக ரீதியான சிப் பேக்கேஜிங் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிகாட்டினார். இந்தியாவில் வடிவமைப்பு, இந்தியாவில் தயாரிப்பு என்ற அடிப்படை கொள்கையுடன் நாடு வெற்றிகரமாக முன்னேறியுள்ளது. செமிகான் இந்தியா திட்டம் அதிவேகமாக முன்னேறி வருகிறது.

புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த ஆலையானது, சர்வதேச ஒத்துழைப்பிற்கு மிகச்சிறந்த கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. இந்திய நிறுவனங்களுடன், ஜப்பான் மற்றும் தாய்லாந்து நாட்டின் முன்னணி தொழில் கூட்டாளர்கள் கைகோர்த்து இந்த சாதனையை படைத்துள்ளனர். இந்த கூட்டு முயற்சி பாராட்டுக்குரியது.

உண்மையான உற்பத்தி திறன் என்பது தனித்தனி தொழிற்சாலைகளில் இருந்து மட்டும் உருவாவதில்லை. ஒரு முழுமையான மற்றும் விரிவான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும். உலகளவில் புகழ்பெற்ற அமெரிக்காவின் சிலிக்கான் வேலி, தைவானின் சின்சு அறிவியல் பூங்கா, ஜப்பானின் சுகுபா அறிவியல் நகரம் போன்ற பிரம்மாண்ட தொழில்நுட்ப மையங்கள் அனைத்தும் இத்தகைய ஒருங்கிணைந்த சூழல் அமைப்பாலேயே உருவெடுத்தன.

ஒரு வலுவான உள்நாட்டு சூழலமைப்பு வேகமாக உருவாகி வருவதை விவரித்த பிரதமர், மைக்ரான், கெய்ன்ஸ், சிஜி செமி போன்ற முக்கிய நிறுவனங்கள் இப்பகுதியில் வெறும் சில மாதங்களுக்குள் ஒரே நேரத்தில் உற்பத்தியை தொடங்கியுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் வகுக்கப்பட்ட நீண்டகால தொழில்நுட்ப கொள்கைகளிலிருந்து உருவாகும்,

ஒரு முன்னேற்றமே தற்போதைய விரிவாக்கம் கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள மின்னணு புரட்சியின் இயல்பான அடுத்த கட்டம் இதுவாகும்" என்றார்.

## தெங்கம்புதூரில் டாஸ்மாக் கடையை உடனே மூட வலியுறுத்தி பொதுமக்கள் முற்றுகை போராட்டம்

### 8ம் தேதி முதல் மூடப்படும் என அதிகாரி உறுதி

சுசீந்திரம்.ஜீலை.6

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவில் பள்ளிகள் அருகே உள்ள 18 டாஸ்மாக் கடைகளை மாற்றுவதாக இருந்த நிலையில் 15 கடைகள் மாற்றப்பட்டுள்ளன இந்நிலையில்நாகர்கோவில் அருகே உள்ள தெங்கம்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள டாஸ்மாக் மதுபான கடையை உடனே மூட வலியுறுத்தி நேற்று மாலை தெங்கம்புதூர் டாஸ்மாக் மது கடை முன்பு அப்பகுதி பொதுமக்களாகிய ஆண்கள், பெண்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டு உட்கார்ந்து கோஷங்கள் எழுப்பி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு பா.ஜ.க. மாவட்ட துணைத் தலைவர் வக்கீல் ஜெகநாதன் தலைமை தாங்கினார். பா.ஜ.க. மாநில செயற்குழு உறுப்பினரும், நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமாகிய ஜவான் ஐயப்பன், பா.ஜ.க. மாவட்ட பொருளாளரும், நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமாகிய முத்துராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அ.தி.மு.க. புத்தளம் பேரூர் செயலாளர் குமரேசன்,தி.மு.க. மாவட்ட பிரதிநிதியும் சொத்தவிளை ஊர் தலைவருமான சந்திரசேகரன் உள்பட பலர்கலந்து கொண்டனர். முற்றுகை போராட்டம் நடைபெறுவது தகவல் அறிந்து டாஸ்மாக் தாசில்தார் குமாரவேல், உதவி ஆணையர் (கலால்) ஈஸ்வரநாதன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து முற்றுகைப் போராட்டம் நடத்தியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார் அப்போது டாஸ்மாக் தாசில்தார் குமாரவேல் 3 நாளில் அதாவது வருகிற 8ம் தேதி புதன்கிழமை முதல் இந்த மதுபான கடையை மூடுவதாக உறுதியளித்ததை தொடர்ந்து முற்றுகை போராட்டத்தை கைவிட்டு பொதுமக்கள் கலைந்து சென்றனர். மாலை 4 மணிக்கு தொடங்கிய முற்றுகைப் போராட்டம் இரவு 7.30 மணி வரை நடைபெற்றது. முற்றுகைப் போராட்டத்தை தொடர்ந்து சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள்பிரகாஷ் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை: துணை ஆணையாளர் உள்பட 6 மீது வழக்கு

ஈரோடு ஜூலை 6

ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் ஈரோடு லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். போலீஸ் சூப்பிரண்டு சாந்தி இன்ஸ்பெக்டர் ரேகா தலைமயிலான இந்த சோதனை சுமார் 7 மணி நேரம் நடந்தது.இந்த சோதனையில் கணக்கில் வராத ஒரு லட்சத்து10ஆயிரத்து100ரூபாய்கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதை யொட்டி கணக்கில் வராத பணம் வைத்திருந்ததாக துணை ஆணையாளர் அசோக் குமார் கண்காணிப்பாளர் ராஜகோபால் உதவியாளர் குருநாதன் மற்றும் புரோக்கர்கள் 3 பேர் என மொத்தம் 6 பேர் மீது போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர் .



## விவசாயிகளின் கோரிக்கைகள் வேளாண் பட்ஜெட்டில் இடம் பெறும்

### தஞ்சாவூரில் நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் அமைச்சர் பேச்சு

தஞ்சாவூர் ஜூலை 6

தஞ்சாவூரில் நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் வேளாண்பட்ஜெட்டில்இடம்பெறும் என அமைச்சர் வினோத்ரவி பேசினார்

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வேளாண் மை உழவர் நலத்துறை சார்பில் வேளாண் பட்ஜெட் தொடர்பாக விவசாயிகளிடம் கருத்து கேட்டுகூட்டம்நடந்தது.இந்தகூட்டத்தில் தஞ்சாவூர் திருவாரூர் நாகை மயிலாடுதுறை கடலூர் அரியலூர் பெரம்பலூர் திருச்சி புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்

கூட்டத்திற்கு அமைச்சர் வினோத் ரவி தலைமை தாங்கினார். அமைச்சர் ஷாஜகான், வேளாண் மை உற்பத்தி ஆணையரும் அரசு செயலருமான சங்கர், சர்க்கரை துறை ஆணையர்கண்ணன்,வேளாண்விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குனர் சந்திரசேகர்சகா முரி, மலை பயிர்கள் துறைஇயக்குனர் விஜயராணி ஆகியோர் முன்னி லை வகித்தனர் .கலெக்டர் ரேவதி அனைவரையும் வரவேற்றார்

கூட்டத்தில் அமைச்சர் வினோத் ரவி பேசியதாவது

தொன்மை வாய்ந்த வேளாண் மை தொழில் காலத்திற்கு ஏற்ப பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு உணவு தானிய தன்னிறைவுக்கு மட்டுமே என இருந்த காலம் மாறி தற்போது வணிக ரீதியாகவும் உருமாற்றம் செய்திட பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது

விவசாயிகளை வணிக ரீதியாக வும் அவர்களின் பொருளாதாரத் தை உயர்த்தி சமூகத்தில் உயர் நிலை அடையும் உன்னதமான நோக்கத்துடன் விவசாயிகள் நலன் சார்ந்த பல்வேறு உயரிய திட்டங் களை வகுக்க எனக்கு உத்தரவிட்ட தன் அடிப்படையில் கருத்து கேட்பு கூட்டங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது

விவசாயம் மேற்கொள்வதில் உள்ள இடர்பாடுகள் அதற்கான தீர்வுகள் புதிய நவீன தொழில் நுட்பங்கள் சாகுபடி செலவீனம் குறைத்தல் வேளாண் நிலங்களைபாதுகாத்தல், நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்துதல், உயிர்ம வேளாண்மையை மாற்று பயிர் ஊக்குவித்து மதிப்பு கூட்டி சந்தைப் படுத்துவதை ஒருங்கிணைத்தல்

பண்ணை எந்திரங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மாபெரும் வேளாண்மை புரட்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்த வேண்டும் இதற்காகபட்டறிவுபெற்றவிவசாயிகளிடம் கலந்தாலோசித்து அல்ல பல கருத்துக்கள் வழிமுறை கள் ,நடைமுறை இன்னல்கள், மற்றும் அதற்கான தீர்வுகள் அனை த்தும் பெற்று அவை யாவும் முதலமைச்சர் வழிகாட்டுதலோடு திட்டங்களாக தீட்டப்பட்டு வரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிப் பாக வெளியிட இந்த அரசு மிகவும் ஆர்வத்துடன் செயல்படுகிறது

இதன் முன்னெடுப்பாக தமிழக முதலமைச்சர்பதவியேற்றஉடன்விவசாயிகளின் துயர் துடைத்திடு ம் விதமாக ரூபாய் 134.83 கோடி ஒதுக்கீட்டில் குறுவை சிறப்பு தொகுப்புதிட்டத்தை செயல்படுத்த ஆணை வழங்கிய அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட முதலமைச்சர் கடுமையான நிதி நெருக்கடியிலும் விவசாயிகளின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து 14.43 லட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 6 ஆயிரம் கோடி வரை பயிர் கடன் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார் விவசாயிகளுக்கான முதன்மை யான பிரச்சனையே பாசன நீர் தங்களது வயலுக்கு முறையே வந்து அடையாதது தான்.இதனை களையும் பொருட்டு,தஞ்சாவூர் திருவாரூர் நாகை மயிலாடுதுறை கடலூர் அரியலூர் திருச்சி ஆகிய மாவட்ட ங்களில் 2499 கிமீ நீளத்திற்கு சி மற்றும் டி பிரிவு வாய்க்கால்கள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டுள்ளது கருத்து கேட்பு கூட்டத்தில் விவசா ய பிரதிநிதிகளி டமிருந்து பெறப் பட்ட கருத்துகள் அனைத்தும் திட்டமாக தொகுத்து முதலமைச் சரின் வழிகாட்டுதலின்படி அனை த்து கோரிக்கைகளும் பரிசீலனை செய்து விரைவில் தீர்வு காணப் படும்

இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத விவசாயிகள் தங்களது கருத்துகளை இணைய வழி வாயிலாக உழவர் செயலி மூலமாக பதிவு செய்யலாம்

இவ்வாறு அவர் பேசினார்

தொடர்ந்து அமைச்சர்கள் வினோத் ரவி, ஷாஜகான் ஆகி யோர் விவசாய பிரதிநிதிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றனர். முன்னதாக விவசாயிகளுக்கு தகவல் தொழில் நுட்பங் களை தெரிவிக்கும்மேலாண்மைதுறை,தோட்டகலைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, விதை சான்றிதழ் ளிப்புத் துறை சார்பில் அமைக்கப் பட்ட கண்காட் சியை அமைச்சர்கள் பார்வை யிட்டனர்

கூட்டத்தில் எம்எல்ஏக்கள் விஜய் சரவணன், துரைசந்திரசேகரன், கோவி. செழியன், ஆர் வைத்தி லிங்கம் ,அண்ணாதுரை, அசோக் குமார், பூண்டி. கலைவாணன், நிவேதா முருகன், எஸ் காமராஜ், மாரிமுத்து ,கும்பகோணம் மாநகராட்சி மேயர் சரவணன், வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர்கள் முருகேசன், சந்திரசேகர் ,மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி ராமன், உதவி கலெக்டர்பயிற்சிசுபாஷ்கார்த்திக், வேளாண்மை இணை இயக்குனர் லட்சுமி காந்தன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

## தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு ஸ்ரீ வராகி அம்மனுக்கு பெண்கள் விளக்கேற்றி வழிபாடு



எட்டயபுரம் ஜூலை 06.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம் அருகே உள்ள N. சுப்பையாபுரம் (எ) நரிப்பட்டி கிராமத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ வாராஹி அம்மன் கோவிலில் தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு வராகி அம்மனுக்கு பால், தயிர், நெய்,தேன் மஞ்சள்,இளநீர், மஞ்சள், சந்தனம் உள்ளிட்ட 16 வகையான மூலிகை திரவிய அபிஷேக அலங்காரம் செய்யப்பட்டு, பல்வேறு வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு தீபாதாரணை தீபாதாரணை, ஷோடச, உபச்சாரம், நட்சத்திரதீபம், பஞ்சமுக தீபம்,பஞ்சமுகதீபம்,தீபாதாரணை அபிஷேகம் நடைபெற்றது.

வாராஹிஅம்மனுக்கு,சிவகாசி,விருதுநகர்,மதுரை,ராமநாதபுரம், சிவகங்கை,தேனி, திருநெல்வேலி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து அம்மனுக்கு தேங்காய் அரிசியால் விளக்கேற்றி வழிபாடு செய்தனர்.

மேலும், இந்த சிறப்பு வாய்ந்த நரிப்பட்டி வராகி அம்மன் கோவிலில் ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை பஞ்சமி தினங்களில் நடைபெறும் சிறப்பு பூஜைகளில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## தொண்டியில் தமுமுகவின் மகளிர் பேரவை சார்பில் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்

### உளவியல் நிபுணர் சமீமா ஆலோசனை வழங்கி பேருரை



ராமநாதபுரம், ஜூலை 6

தமிழ் நாடு முஸ்லிம் மகளிர் பேரவை நடத்தும் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புனர்வு கூட்டம் மாலை 6.30 மணிக்கு தொண்டி தெற்கு தெரு ஜமாத் ஹாஜி அப்துர்ரஹீம்சமுதாய நலக்கூடத்தில் ஷெரிபா ஜெயினுலாப்தீன் கிரா அத் ஓதி தொடங்கி வைத்தார்.

ஆலிமா முத்து நாச்சியா வரவேற்புரை நிகழ்த்தினார். கவுன்சிலர் சமிமா பானு சிற்றுரை ஆற்றினார் .

ஜென்னத்துல் பிர்தவ்ஸ் ஜுனைதா பானு , கோட்டையம்மாள் பரிதா பானு நல்லாசிரியர் சாந்தி முருகானந்தம் ஆகியோர் குழந்தைகள் நலன் நல்லொழுக்கம் குழந்தைகள் பாதுகாப்பு பற்றி உரை நிகழ்த்தினர்.

உளவியல் ஆலோசகர் சமீமா குழந்தைகளை பாதுகாப்போம் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவோம் நாட்டின் எதிர்காலம் குழந்தைகள் கைகளில் இருக்கிறது குழந்தைகள்பாதுகாப்பாக இருந்தால்தான் குடும்பம் பாதுகாப்பாக இருக்கும் குடும்பம் பாதுகாப்பாக இருந்தால்தான் சமூகம் பாதுகாப்பாக இருக்கும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில் போஸ்கோ சட்டத்தின் கீழ் பல்வேறு வழக்குகள் பதியப்பட்ட நிலையில் பதிவு செய்யப்படாத சம்பவங்களும் இருக்கின்றன இந்த நிலையில் பெற்றோர்களும் பொதுமக்களும் போஸ்கோ சட்டம் பற்றிய விழிப்புணர்வு இருக்க வேண்டும் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை சிறப்பான முறையில் உரை நிகழ்த்தினார். 200 க்கும் மேற்பட்ட பெண்கள்கலந்துகொண்டனர்.

18 வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளையும் பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு போஸ்கோ சட்டத்தின் மூலமாக உண்மை அறிந்து சரியான நடவடிக்கை தமிழக அரசு எடுக்க வேண்டும், பெண்கள் பள்ளிகளில் இது பற்றிய விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்,

தொண்டி பேரூராட்சியில் பல்வேறுவார்டுகள் குறிப்பாக 13 வது வார்டில் கழிவு நீர் கால்வாய்க்கு நிதி ஒதுக்கியும் அந்த நிதி எங்கே என்று தெரியவில்லை அப்பகுதி மக்களுடைய நலன் கருதி தொண்டி பேரூராட்சி கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலை வசதிகள் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும், நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இரண்டு மூன்று தினங்களில் பேரூராட்சி அலுவலக முற்றுகை போராட்டம் நடைபெறும்,

மேலும் தொண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 600க்கும் மேற்பட்ட மாணவிகள் படிக்கிறார்கள் இப்பள்ளியில் போதியகட்டிடவசதிகள்இல்லை மேலும் மாணவிகள் தங்கும் ஹாஸ்டல் வசதி மிக குறைவாக இருக்கிறது மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு என தீர்மானங்கள் நிறைவேற்றப்ப ட்டது

ஆலிமா செய்யதுசுல்தான் பீவி சித்திக்கியா நன்றி கூறினார். ஏற்பாடுகளை தமிழ் நாடு முஸ்லிம் மகளிர் பேரவை அமைப்பின்நிர்வாகிகள்சிறப்பாகசெய்திருந்தனர்.

தினதமிழ்


# சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம்



சேலம், ஜூலை 6

தமிழகத்தில் சாலை விபத்துகளை முற்றிலும்குறைக்கவிபத்தில்லாபயணத்தை உருவாக்கிட பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின்சார்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் சேலம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வு கூட்டம் காவல் துறை, போக்குவரத்து துறை, வருவாய் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நடத்தப்பட்டது.

குறிப்பாக மனித உயிர்களின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளை தவிர்க்கும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்தால் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர் சாலை விபத்துக்கள் ஏற்படும் இடங்களை கண்டறிந்து காவல்துறை, நெடுஞ்சாலை துறை, போக்குவரத்து துறை மற்றும் வருவாய் துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் சாலை விபத்துகள் ஏற்படாமல் தடுக்கும் வழிமுறைகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் ஜனவரி 2026 முதல் மே 2026 வரை அதி வேகமாக வாகனம் ஓட்டுதல், தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டுதல், கைபேசி உபயோகித்துக் கொண்டு வாகனம் ஓட்டுதல் , அதிக நபர்களை வண்டியில் ஏற்றி செல்தல், அதிக பாரங்களை வண்டியில் ஏற்றி செல்தல் ஆகிய குற்றங்களுக்காக 1874 நபர்களின் வாகன ஓட்டுனர் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதில் மே மாதத்தில் மட்டும் 265 நபர்களின் வாகன ஓட்டுனர் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் ஹெல்மெட் அணிதல், நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள்சீட் பெல்ட் அணிதல், நிர்ணயிக்கப்பட்ட வேகத்திற்குள் வாகனங்களை இயக்குதல், போக்குவரத்து விதிகளை வாகன ஓட்டிகள் கடைபிடிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதேபோன்று சாலை விபத்துக்களை முற்றிலும் தடுக்கும் வகையில் அலுவலர்கள் சாலை பாதுகாப்பு குறித்த தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை எடுத்து அதிக அளவிலான பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்.



# கராத்தே பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு கறுப்பு கலர் பெல்ட் வழங்கும் விழா

ஈரோடு ஜூலை 6

ருத்ரா கராத்தே டு அசோசியேஷன் மற்றும் அறம் கலையகம் சார்பில் கராத்தே பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கறுப்பு கலர் பெல்ட் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடந்தது. இதில் சுமார் 100 கற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் ஈரோடு மாநகர மாவட்ட அதிமுக செயலாளர் பெரியார் நகர் மனோகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்ளுக்கு கறுப்பு கலர் பெல்ட் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் பயிற்சியாளர்கள் பரமேஸ்வரன், ஜோதி, மாரிமுத்து, ஸ்வேதா, சிராஜுதீன், சதீஷ்குமார் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை 6 வது டான் பிளாக் பெல்ட் மற்றும் அறம் கலையகம் தலைமை பயிற்சியாளர் ராஜா செய்திருந்தார்.



# காரப்பட்டு அருகே ஓலா பேருந்து மோதி விபத்து சம்பவ இடத்தில் ஒருவர் பலி

கிருஷ்ணகிரி, ஜூலை. 6

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு இருந்து ola இருசக்கர வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் கம்பெனிக்கு தொழிற்சாலைக்கு சொகுசுப் பேருந்தில் செல்லும் பொழுது எதிரே வந்த இருசக்கர வாகனம் இது மோதி விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது இப்பகுதியில் தொடர்ந்து விபத்து ஏற்படும் பகுதியாக மாறி வருகிறது காரணம் மது விற்பனை நிலையம் சாலையின் அருகாமையிலேயே உள்ளதாகவும் 500 மீட்டருக்கும் குறைவான தூரத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்திருப்பதும் இதன் காரணமாக நோயாளிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் அதிகம் இப்பகுதியில் பயன்படுத்தி வாகனங்கள் சென்று வருவதாலும் கடந்த ஒரு மாத காலத்தில் ஆறு விபத்துக்கள் ஏற்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது இவ்விபத்திற்கு முக்கிய காரணமாக அரசு மதுபான கடையே காரணம் என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் தொடர்ந்து குற்றம் சாட்சி வருகின்றனர் அரசு 500 கிலோமீட்டர் 500 மீட்டருக்கு குறைவாக உள்ள மதுபான கடைகளையும் மருத்துவமனை அருகிலேயே உள்ள மதுபான கடைகளை அகற்றும் முயற்சியிலும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது ஆனால் இப்பகுதி மட்டும் கைவிடப்பட்டது இவ்வூர் பகுதி மக்களிடையே பெரும் அதிப்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது எனவே வரும் காலங்களில் பள்ளி மாணவர்கள் பாதுகாப்பாக செல்லவும் வாகன ஓட்டிகள் நிம்மதியுடன் சென்று வரவும் இம்மதுபான கடையை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் பொது மக்களும் சமூக ஆர்வலர்களும்கோரிக்கை விடுத்துள்ளனர்

## பாலக்கோடு அருகே

# கஞ்சா விற்ற 3 பேர் கைது 150 கிராம் கஞ்சா பறிமுதல்

தருமபுரி ஜூலை 06

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சுற்றுவட்டார பகுதிகளில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து பாலக்கோடு காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். பாலக்கோடு அருகே உள்ள காவாப்பட்டி பிரிவு சாலையில் 3 வாலிபர்கள் கையில் பையுடன் சந்தேகம்படும்படியாக நின்று கொண்டிருந்தனர்.

காவல்துறையினரை கண்டதும் தப்பி ஓடி முயன்றவர்களை மடக்கி பிடித்து விசாரித்ததில், பாலக்கோடு மைதீன்நகரை சேர்ந்த அமீன்(வயது20), புது பட்டாணியர் தெருவை சேர்ந்த முகமது சல்மான் (வயது26), சான்கான் தெருவை சேர்ந்த பர்வேஸ்அகமது (வயது31) என்பது தெரிய வந்தது, அவர்கள் வைத்திருந்த பைகளை சோதனை செய்ததில் 150 கிராம் கஞ்சாவை சிறு சிறு பொட்டலங்களாக கட்டி விற்பனைக்காக மறைத்து வைத்திருந்ததும் தெரியவந்தது.

அவர்களிடமிருந்த கஞ்சாவை பறிமுதல் செய்த காவல்துறையினர் 3 பேரையும் கைது செய்து தருமபுரி சிறையில் அடைத்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# குழந்தை, கொத்தடிமை தொழிலாளர்கள் பணியமைத்தப்பட்டுள்ளனரா?

## 175 இடங்களில் அதிகாரிகள் ஆய்வு

தஞ்சாவூர் ஜூலை 6

தஞ்சாவூர் மாவட்டத்தில் குழந்தை, கொத்தடிமை தொழிலாளர்கள் பணி புரியப்பட்டுள்ளனரா?என 175 இடங்களில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்

சென்னை தொழிலாளர் ஆணையர் ஆணையின்படியும் திருச்சி கூடுதல் தொழிலாளர் ஆணையர், இணை ஆணையர் ஆகியோரின் அறிவுரைகளின் படியும் குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்புச்சட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னி ட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமை தொழிலாளர்கள் பணி அமைக்கப்பட்டுள்ளனரா? என தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக் கோட்டை, பாபநாசம் பகுதிகளில் உள்ள 175 நிறுவனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 14 வயது நிறைவடைந்த, ஆனால் 18 வயது நிறை வடையாத வளரிளம் பருவத் தினரை அபாயகரமான அனைத்து வகையான தொழில்களிலும் பணி அமர்த்துவது தடை செய்யப்பட்டுள் ளது

இந்த சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் குழந்தை தொழிலாளர் களை பணிக்கு அமர்த்தும் வேலை அளிப்பவருக்கு ரூபாய் 20 ஆயிரம் முதல் ரூபாய் 50 ஆயிரம் வரை அபராதம் அல்லது 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரை சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்

எனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் யாரும் பணி புரிவது கண்டறியப்பட்டால் சைல்ட் ஹெல்ப்லைன் 10 98 என்ற இலவச தொலைபேசி எண்ணிலோ அல்லது தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அல்லது தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம் ) அலுவலக தொலை பேசி எண் 04362264886தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என தொழிலாளர் உதவி ஆணை யர் ராஜசேகரன் தெரிவித்துள்ளார்

# சென்னையில் 41 மின்சார ரெயில் சேவைகள் ரத்து: பயணிகள் அவதி

சென்னை, ஜூலை 6

சென்னையில் 41 மின்சார ரெயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் அவதி அடைந்துள்ளனர்.

சென்னை கடற்கரை தாம்பரம் தடத்தில் தினமும் 200க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் தினமும் சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயணம் செய்து வருகின்றனர். அலுவலக பணிக்கு செல்வோர், பள்ளி, கல்லூரிக்கு செல்வோர் என அனைத்து தரப்பு மக்களும் புறநகர் மின்சார ரெயில் போக்குவரத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை கடற்கரைதாம்பரம் இடையே மின்சார ரெயில் வழித்தடத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 12ந் தேதி ஆகிய நாட்களில் ரெயில் தண் டவாளம் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் சென்னை கடற்கரை தாம்பரம் இடையே இருமார்க்கமும் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 வரை மின்சார ரெயில் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

ரெயில் சேவைகள் ரத்து செய்யப்படுவது முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தங்களின் அவசரப் பயணங்களை 10:30 மணிக்கு முன்பாகவே முடித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஆயிரக்கணக்கான பயணிகள் காலை 10 மணிக்கு முன்பாகவே தாம்பரம் ரெயில் நிலையத்தில் திரண்டனர். ஒரே நேரத்தில் வழக்கத்திற்கு மாறாகப் பெருந்திரளான மக்கள் கூடியதால், டிக்கெட் கவுண்ட்டர்கள் மற்றும் நடைமேடைகளில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

ரெயில்கள் ரத்தால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். பயணிகளின் சிரமத்தைக் குறைக்க தாம்பரம்செங்கல்பட்டு,அரக்கோணம்மற்றும்திருமால்பூர் ஆகிய பகுதிகளுக்கு இடையே குறிப்பிட்ட கால இடைவெளியில் தெற்கு ரெயில்வே சிறப்பு ரெயில்களை இயக்கி வருகிறது. மதியம் 3:30 மணிக்கு மேல் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்தவுடன், புறநகர் மின்சார ரெயில் சேவைகள் மீண்டும் வழக்கம்போல் தடையின்றி இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை, ரெட்ஹில்ஸ் அடுத்த காந்தி நகர், எம்ஜிஆர் நகர், கலைஞர் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஜடா முனிஸ்வரர் அங்காளம்மன் ஆலய புனராவர்த்தன ஜீர்ணோர்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலயத் தலைவர் ஜெகன் மற்றும் ஆலய விழா குழுவினர் கோயில் கும்பாபிஷேகத்தைசிறப்பாகநடத்தினார்.சாமிதரிசனம்செய்தஅனைத்துபக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# குருந்தன்கோட்டில் உயிர்பலி வாங்க காத்திருக்கும் வேளாண்மைத்துறை அலுவலக கட்டிடம்




நாகர்கோவில், ஜூலை. 6

குருந்தன்கோடு சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் தேவைக்காக குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலுள்ள ஒருபழையகட்டிடத்தில்வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலை துறை சார்ந்த 'வேளாண் விரிவாக்க மைய அலுவலகங்கள்' செயல்பட்டு வருகின்றன.இரண்டுஅறைகளுடன்மிகச்சிறிய பரப்பளவிடான கட்டிடத்தில் 2 துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் உட்பட அலுவலகப் பணியாளர்கள் என 15க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு விஷயங்களுக்காக நூற்றுக்கணக்கான விவசாயிகளும் தினந்தோறும் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

மிகப்பழமையான இந்த கட்டிடத்தினுடைய கான்கிரீட் மேற்கூரை சேதமடைந்து , அடிக்கடி பெயர்ந்து விழுவதுடன், உள்ளேயுள்ள கம்பிகள் வெளியே தெரிவதுடன் அவைகளும் உதிர்ந்து கொண்டிருக்கின்றன. மேலும், மழை பெய்யும் போது மட்டுமல்ல மழை நின்ற பிறகும் தொடர்ந்து தண்ணீர் கட்டிடத்திற்குள் ஒழுகுகிறது. இதனால் அலுவலக கோப்புகளும், உபகரணங்களும் நாசமாகின்றன. கட்டிடத்தில் மேல்பகுதியில் ஏராளம் செடி கொடிகள், மரங்கள் வளர்ந்து அவற்றின் வேர்கள் கட்டிடத்தின் கீழ்பகுதி வரை வளர்ந்துள்ளன.

தரைப்பகுதிகளும் பக்கச்சுவர்களும் கூட பெயர்ந்த நிலையில் மிகவும் ஆபத்தாக காணப்படுகிறது.

இந்த கட்டிடத்தை அகற்ற எந்த நடவடிக்கை எடுக்காத நிலையில் அப்பகுதி விவசாய பிரதிநிதிகளான ராஜாக்கமங்கலம் சானல் தலைவர் தேவதாஸ், பூமி பாதுகாப்பு சங்க செயலாளர் தங்கப்பன் உள்ளிட்டோர் பல ஆண்டுகளாக புதிய கட்டிடம் கட்டுமாறும் , அதற்கான இடத்தை ஒதுக்குமாறும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதன் பலனாக, கடந்த சில வருடங்களுக்கு முன்பு இதன் அருகிலேயே சுமார் 13.5 சென்ட் நிலம் புதிய கட்டிடம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டது.

ஆனால், கட்டிடம் கட்டுவதற்கான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கான எந்த முயற்சியையும் வேளாண்மை சார்ந்த துறைகளின் அதிகாரிகள் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதன் காரணமாக இதுவரை கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை.

இந்நிலையில், சமீபத்தில் பெய்த மழையில் கட்டிடம் மேலும் வலுவிழந்த நிலையில் உள்ளது . ஆகவே, அரசு உடனடியாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கி, மேற்படி 13.5 சென்று நிலத்தில் கட்டிட வேலையை தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிரந்தரமாக புதிய கட்டிடம் கட்டப்படும் வரை தற்காலிக ஏற்பாடாக மேற்படி வேளாண்மைத்துறை அலுவலகங்களை அவ்வளாகத்திலுள்ள வேறு நல்ல அரசு கட்டிடத்திற்கு மாற்றி செயல்பட வைக்கவோ, அல்லது தனியார் கட்டிடங்களை வாடகைக்கு எடுத்து அங்கு அலுவலகங்களை மாற்றவோ வேண்டும். இல்லாவிட்டால, வரும் மழைக்காலத்தில் அரசு அலுவலகத்திற்கு உள்ளேயே உயிர்பலி ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என புகார் தெரிவித்து உள்ளனர்.

# திருட்டு பணத்தில் மனைவி பெயரில் கேரளாவில் நிலம்

## நீதிமன்றம் மூலம் கையகப்படுத்திய மாவட்ட காவல்துறை

நாகர்கோவில், ஜூலை. 6

மார்த்தாண்டத்தை அடுத்த புறாக்கோடு என்ற பகுதியை சேர்ந்தவர் ராஜன் என்பவரது மனைவி புஷ்பம் (38). இவர் கடந்த ஜனவரி மாதம் வீட்டை பூட்டிக் கொண்டு குடும்பத்துடன் தனது உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தனர். பின்னர் வந்து பார்க்கும் பொழுது அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் வீட்டை உடைத்து பீரோவில் இருந்த 14 பவுன் நகை மற்றும் 20 ஆயிரம் ரூபாய் திருடப்பட்டு இருந்தது தெரிய வந்தது. உடனே இது குறித்து புஷ்பம் பளுகல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இந்த கொள்ளை தொடர்பாக கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுப்படி, மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் மேற்பார்வையில் பளுகல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான போலீசார் குற்றவாளியை கண்டறிந்து கைது செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் வீடு புகுந்து திருடிய சம்பந்தப்பட்ட குற்றவாளி கேரளா மாநிலம் காட்டாக்கடை, புலநாடு பகுதியை சேர்ந்த உன்னி கிருஷ்ணன் (53) என்பது தெரிய வந்தது. இதனையடுத்து கேரளா போலீசார் உதவியுடன் குற்றவாளியை கைது செய்து, போலீசார் கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

இதனைத் தொடர்ந்து போலீசார் நடத்திய தொடர் விசாரணையில் உன்னி கிருஷ்ணன் கொள்ளை அடித்த நகை மற்றும் பணத்தின் மூலமாக கேரள மாநிலம் நெய்யாற்றின்கரை பகுதியில் அவரது மனைவி பெயரில் சுமார் 8.40 லட்சம் மதிப்பிலான 10 சென்ட் நிலம் வாங்கியது தெரியவந்தது.

இது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், இந்த வழக்கில் துரிதமாக செயல்பட்ட பளுகல் காவல் நிலைய போலீசார் தகுந்த ஆதாரங்களை குழித்துறை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைத்தனர். அதன்அடிப்படையில் குற்றவாளி திருடிய பணத்தில் தன்னுடைய மனைவியின் பெயரில் வாங்கப்பட்ட நிலத்தை கையகப்படுத்த குழித்துறை நீதிமன்பு உத்தரவின் பேரில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தஞ்சாவூரில்

# நடந்த கருத்து கேட்பு கூட்டத்தில் திமுக எம்எல்ஏக்கள் பங்கேற்றது ஏன்? முன்னாள் அமைச்சர் பேட்டி



தஞ்சாவூர் ஜூலை 6

தஞ்சாவூரில்நடந்த கருத்து கேட்புகூட்டத்தில் திமுக எம்எல் ஏக்கள் பங்கேற்றது ஏன் என்று முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் கருத்து தெரிவித் துள்ளார்

தஞ்சாவூர் கலெக்டர் அலுவ லக த்தில் நடந்த தமிழக வேளாண்மை பட்ஜெட்டுக்கான கருத்து கேட்பு கூட்ட த்தில் பங் கேற்ற முன்னாள் அமைச்ச ரும்,திருவிடைமருதூர் தொகுதி எம்எல்ஏயுமான கோவி. செழி யன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார் .அப்போது அவர் கூறியதாவது:

கடந்தஐந்துஆண்டுகள்தமிழகத்தில்முதலமைச்சராகமு.க. ஸ்டாலி ன் இருந்தபோது இதே தஞ்சாவூரில் பலமுறை விவசாயிகள்பிரச்சனைக்குதீர்வு காணப்பதற்கு பல கூட்ட ங்களை நடத்தி ஒரு பொற்கால ஆட்சியை தந்துள்ளார். அப்போது எதிர்கட்சியினர்யாரும் அந்த கூட்டங்களில் கலந்து கொள்வது கிடையாது

ஆனால் இன்றைக்கு திமுக தலைவர் ,விவசாயிகள் பிரச் சனை யை மையமாக நடத்தப்படுகின்ற கூட்டத்தில் கட் டாயமாக கலந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறு த்திய தால் திமுக எம்எல்ஏக்கள் கலந்து கொண்டோம். கடந்த காலங் களில் கூட்டம் நடக்கும் போது எந்த அளவிற்கு விவசாயிகள்பிரச்சனையை கேட்டு செயல்படுத்தினோம்.

ஆனால் இன்றைக்கு நடைபெற்ற கருத்து கேட்பு கூட் டத்தில் ஏற்பட்ட சலசலப்பு ,புறக்கணிப்பு, எதிர்ப்பு குரல், இவைகள் எல்லாம் இந்த அரசு செவிமடுத்து கேட்டு அதை நிறைவேற்றினால் ,கடந்த கால சாதனை தொடர அது வாய்ப்பாக இருக்கும் .திமுக சார்பில் நாங்கள் நெல் குவிண்டலுக்கு ரூபாய் 3,500, கரும்புக்கு உரிய விலையும் வழங்க வேண்டும் என வற்புறுத்தினோம்

டெல்டா மாவட்டங்களில் இந்த ஆண்டு இயற்கை பொய்த்து விட்ட து .விவசாயம் எங்கே என்ற நிலை தொடர்கிறது. எனவே மும்முனை மின்சார திட்டத்தை செயல்படுத்த வேண்டும். திமுக அரசு இதுபோன் ற மின் இடர்பாடு ஏற்பட்ட போதெல் லாம் சோலார் திட்டத்தை ஊக்குவி த்து மானியம் தந்து ஊக்குவித்து மானியம் தந்து விவசாயிகளை பாதுகாக்கப்பட்டனர். எனவே புதிய மின் தட்டுப்பாட்டை காரணம் காட்டி விவசாயிகளை வஞ்சிக் காமல் சோலார் மின் திட்டத்திற்கு அதிக மானியம் தந்து விவசாயத்தை காப்பாற்ற வேண்டும்

தமிழக முதலமைச்சர். விஜய் தேர்தல் நேரத்தில் கூறும் போது அனைத்து பயிர் கடன்களும் ரத்து எனக் கூறினார். ஆனால் இன்றைக்கு அதில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது இதுவரை எந்த கூட்டுறவு சங்கத்தி லும் கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை என்பது எதார்த்த உண்மை இந்த கோரிக்கைகளை விவசாயிகள் பேசி வருகின்றனர். இதே கோரிக் கையை நாங்கள் எதிர்க் கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறி, சட்ட மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் விவசாயிகள் பிரச்சனைக்கு தொட ர்ந்து போராடுவோம். இவ்வாறு அவர் கூறினார்




# திராவிடக் கொள்கையை பின்பற்றி த்தான் தமிழகத்தில் எந்த கட்சி யாலும் ஆட்சி நடத்த முடியும்

## தி.மு.க துணை பொது செயலாளர் திருச்சி சிவா எம்பி பேச்சு

தஞ்சாவூர் ஜூலை 6

பெரியார் அண்ணா கருணாநிதி ஆகியோரது திராவிடக் கொள்கை யை பின்பற்றினால் தான் தமிழக த்தில் எந்த கட்சியாலும் ஆட்சி நடத்த முடியும் என்று ஒரத்தநாடு திமுக பொதுக்கூட்டத்தில் திமுக துணை பொது செயலாளர் திருச்சி சிவா எம்.பி கூறினார்

திமுக முன்னாள் தலைவர் கருணாநிதி 103 வது பிறந்தநாள் விழா மற்றும் ஒரத்தநாடு சட்டமன்ற தொகுதி வாக்காளருக்கு நன்றி அறிவிப்பு கூட்டம் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் நடந்தது இந்த கூட்டத்திற்கு தஞ்சாவூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் துரை சந்திரசேகரன் எம் எல் ஏ தலைமை தாங்கினார் . திமுக துணை பொது செயலாளர் திருச்சி என் .சிவா எம்பி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகத்திற்கு மக்கள் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை யை கொடுக்கவில்லை .அந்த கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமென்று மக்கள் முடிவெடுத்து இருந்தால் 180 இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும் .அப்படி நடக்கவில்லை. திமுக கூட்டணியில் இருந்த கட்சி களின் ஆதரவில் தான் அந்த கட்சி யால் ஆட்சி அமைக்க முடிந்தது ஆனால் பொதுவெளியில் அந்த கட்சியின் பின்னால் மக்கள் எல்லோரும் சென்று விட்டதாக ஒரு மாயை உருவாக்கப்பட்டு வருகிறது தற்போதைய தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சியிலும் திராவிட இயக்க தலைவர்கள் பெரியார், அண்ணா ,கலைஞர் ஆகியோரின் கொள்கைகள் தான் நடைமுறைப் படுத்தப்படுகிறது .திராவிட கொள் கைகளை பின்பற்றி மு க ஸ்டாலின் தலைமையில் தொடர்ந்து உத்வேக த்துடன் செயல்பட்டு வரும் தேர்தலி ல் அமோக வெற்றி யை பெறுவதற் கு திமுகவினர் பாடுபட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

கூட்டத்தில் முன்னாள் அமைச்ச ரும் ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏ யுமான ஆர். வைத்திலிங்கம் முன்னாள் எம்எல்ஏ க்களான எம் ராமச்சந்திரன் ,கே டி மகேஷ் கிருஷ்ணசாமி ,டி கே ஜி நீலமேக ம்,சி. ராஜேந்திரன், மாவட்ட தி.மு.க பொருளாளர் எல் ஜி அண்ணா, தஞ்சாவூர் மாநகராட்சி (பொறுப்பு) மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம் ,ஒரத்தநாடு ஒன்றிய திமுக செயலாளர் முருகையன், ரமேஷ் குமார் ,தலைமைக் கழக பேச்சாளர் கலைமணி இளய பாரதி வரகூர் காமராஜ், விஸ்வ லிங்கம், தஞ்சாவூர் காமராஜ், பொதுக்குழு உறுப்பினர் திராவிட கதிரவன் உள்பட பலர் கலந்து கொண்டனர் முன்னதாக ஒரத்தநாடு கிழக்கு ஒன்றிய திமுக செயலர் கார்த்தி கேயன் அனைவரையும் வரவேற் றார் நிறைவாக ஒரத்தநாடு பேரூர் திமுக செயலர் கிருஷ்ணகுமார் நன்றி கூறினார்.

## தருமபுரியில்

# மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி தவெகவில் இணைந்தனர்



தருமபுரி ஜூலை 06

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் ஏ. ஜெட்டிஅள்ளி பஞ்சாயத்து எர்ரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் தங் களை தமிழக வெற்றிக் கழகத்தில் தரும புரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் மாநில நிர்வாக குழு உறுப்பினர் M. சிவன் முன்னிலையில் ஏ.ஜெட்டி அள்ளி ஊராட்சி செயலாளர் தினேஷ் சப ரிபிரசாத் ஏற்பாட்டில் இணைத்துக் கொண்டனர். இதில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக இணை செயலாளர் வீர மணி ,மாவட்ட வாக்குச்சாவடி அணி இணை அமைப்பாளர் தங்கராஜ், ,தக வல் தொழில்நுட்ப அணி தினேஷ் ராஜா மற்றும் நல்லம்பள்ளி வடக்கு ஒன்றிய செயலாளர் சென்னப்பன், ஒன்றிய நிர் வாகிகள் லோகேஷ், நவீன், அன்பரசன், திருமால் ,பெருமாள், ராஜேஷ் குமார், ஹரிஹரன், கார்த்திகேயன், கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




## தருமபுரியில்

# மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி தவெகவில் இணைந்தனர்

தருமபுரி ஜூலை 06

தருமபுரி மாவட்டம் அரூரில் கிரிடிட் ஆக்சஸ் இந்தியா பவுண்டேஷன் நிறுவ னத்தின் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது . இதில் டிஜிட்டல் பண மோசடிகளை எப் படி தடுப்பது, குழு மற்றும் தனி நபர் கடன் ஒழுங்குபடுத்தும் பழக்கம், பொறுப்புடன் கடன் எடுப்பது, கடன் தேவைக்குத்தான் வாங்க வேண்டும் ஆடம்பரத்திற்கு வாங்கவேண்டாம் கடனை பெற்றவர்கள் வீட்டு தேவைக்கு பயன்படுத்துங்கள்குறித்தவிழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்தினர். இதில் மண்டல மேலாளர் R.மணி, பிராந்திய மேலாளர் பசுவராஜ் ,YK. பகுதி மேலா ளர் அருள்மணி, வட்டாச்சியர் வள்ளி , துணைவட்டாட்சியர்எழில்மொழி,வரு வாய் ஆய்வாளர் சத்திய பிரியா, சிறப்பு காவல் ஆய்வாளர் ரோஜா, கிளை மேலாளர்கள் ராஜேஷ் ,கேசவன் உள் பட பலர் கலந்து கொண்டனர்.



# உலக யோகா தினத்தை முன்னிட்டு சுப்ரா யோகா கல்வி நிறுவனங்கள் சார்பில் முப்பெரும் விழா

கோவை ஜூலை:06

கோவை பீளமேடு "கோ இந்தியா" ஹாலில் உலக யோகா தினத்தை முன் னிட்டுசுப்ராயோகாகல்விநிறுவனங்கள் மற்றும் புனர்ஜீவன் ஆயுர்வேத நிலை யம் ஆகியோர் இணைந்து இயற்கை மற் றும் யோகா புத்தகங்கள் வெளி யீடு,யோகாவில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங் கும் விழா மற்றும் யோகா பயிற்சி முடித் தவர்களுக்கு பட்டமளிப்பு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது. இந்த விழாவில் சிவசைலம் இயற்கை உண வின் தூதுவர் டாக்டர் மு.அ. அப்பன்,ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மை கழக செயலாளர் முத்துக்குமார், ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகர சத்திரம் இணை செயலா ளர் கணேஷ் பாபு,மண்டல செயலாளர் முத்துமாணிக்கம்,ஸ்ரீ காயத்ரி இயற்கை வைத்தியசாலை சண்முகவேல், அண்ணா யுனிவர்சிட்டியின் கோவை ஒருங்கிணைப்பாளர் ரேணுகா தேவி,கோவை கலைமகள் கல்லூரியின் முதல்வர் மாலா,வணிகவரித்துறை இணை இயக்குனர் ஓய்வு கணே சன்,மதுரைநகரத்தார்சங்கத்தின்துணைத் தலைவர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்த னர்.

விழாவில் அனைத்து சாதனையாளர்க ளுக்கும் விருதுகள் வழங்கி சிறப்பரை செய்தார் சுப்ரா யோகா கல்வி நிறுவனங் களின் நிறுவனர் சுப்பரமணியன் நாச்சி யப்பன்.இந்த விழாவின் சிறப்பாக யோகாமாணவர்களின்பல்வேறுயோகா சனங்கள்பார்வையாளர்களைவியப்பில் ஆழ்த்தியது.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம் அணைக்கார பட்டி ஊராட்சி சிறைக்காடு கிராமத்தில் மலைவாழ் மக்கனின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.வைத்தியநாதன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண் டார்.



# முருங்கவிளை வழியாக மார்த்தாண்டத்துக்கு புதிய பஸ்

## கலெக்டர், அமைச்சர் பஸ்சில் பயணம் செய்து துவக்கி வைத்தார்

நாகர்கோவில், ஜூலை. 6

குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட முருங்கவிளை சந்திப்பு, கருங்கி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்வோர் தங்களின் அன்றாட பயணங்களுக்குப் போக்குவரத்து வசதியின்றி சிரமப்பட்டு வந்தனர்.

இதையடுத்து மாற்றியமைக்கப்பட்ட பேருந்து நேற்று முதல் இயக்கப்பட்டது. இதன்துவக்க நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட் சியர் பிரதாப் தலைமை வகித்தார். தாரகை கத்பர்ட் எம்எல்ஏ முன்னிலை வகித்தார்.

அமைச்சர் ராஜேஷ்குமார் கொடிய சைத்து துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பர்ட் ஆகியோர் மாற்றியமைக்கப்பட்ட புதிய பேருந்து சேவையில் பயணச்சீட்டு பெற்று பயணிகளுடன் பயணம் மேற் கொண்டார்கள்.

இந்த பஸ் குளச்சலில் இருந்து ரீத்தா புரம், பாலபள்ளம், வெள்ளியாவிளை, கருங்கல், திப்பிறமலை தொடக்கப் பள்ளி, எட்டாணி, முருங்கவிளை, கஞ் சிக்குழி, பள்ளியாடி, இரவிபுதூர்கடை, சாங்கை வழியாக மார்த்தாண்டம் செல் லும்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நாகர்கோ வில் மண்டல பொது மேலாளர் பாலசுப் பிரமணியன், உதவி மேலாளர் (வணி கம்) மகேஷ், கல்குளம் வட்டாட்சியர் ராஜேஷ், துறை அலுவலர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார் கள்.




# கோவை சகோதயா பள்ளிகளின் 47வது மினி மாரத்தான்

கோவை,ஜூலை:6

சமூகப் பொறுப்புணர்வு,ஒற்றுமை மற் றும் உறுதியை வெளிப்படுத்தும் வகை யில், கோவை நேரு விளையாட்டு வளா கத்தில் "போதைப்பொருளுக்கு எதிராக ஓடுவோம்" என்ற கருப்பொருளில் மாபெரும் மினி மாரத்தான் போட்டியை வெற்றிகரமாக நடத்தியது. ஆரோக்கிய மான,போதைப்பொருள் இல்லாத சமு தாயத்தை உருவாக்கும் நோக்கில் நடை பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில்,60 பள்ளிகளைச் சேர்ந்த 1,300 மாணவ,மாணவியர் உற்சாகத்துடன் பங் கேற்றனர்.

மாரத்தான் போட்டி 12, 14, 16 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் என நான்கு வயது பிரிவுகளிலும், ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக நடத்தப் பட்டது. மாணவர்கள் "போதைப்பொரு ளுக்கு இல்லை" என்ற முழக்கத்துடன் பதாகைகளை ஏந்தி, ஆசிரியர்கள் மற் றும் தன்னார்வலர்களுடன் உற்சாகமாக ஓடி,ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் வலுவான செய்தியை பொதுமக்களிடம் கொண்டு சென்றனர்.

இந்த நிகழ்வை கோவை மாநகர காவல்துறையின் துணை ஆணையர் ஆர் கோகுலகிருஷ்ணன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு கொடி யசைத்து தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், "போதைப்பொருள் ஒருவ ரின் வாழ்க்கையை மட்டுமல்ல,ஒரு குடும்பத்தையே சீரழிக்கிறது. இன்று நம் குழந்தைகள் உடல்நலத்திற்காக ஓடி னால், நாளை அவர்கள் போதைப்பொ ருளை நோக்கி ஓடமாட்டார்கள்"என்று தெரிவித்தார்.இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக VGM ஹாஸ்பிடல் இயக் குநர் சுமன் கலந்து கொண்டார்.

மேலும் சகோதயா பள்ளியின் தலை வர் நவமணி,துணைத் தலைவர் டாக்டர் ஞானபாண்டிதன்,பொதுச் செயலாளர் அரசு பெரியசாமி,இணைச் செயலாளர் டாக்டர் சாம்சன் செல்லதுரை,துணை செயலாளர் டாக்டர் அபிஷேக் பால் ஜாக் சன்,சந்திரன் ஆகியோருடன்,குழு உறுப் பினர்களான பிரேமா,சார்லின் மதி செல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பாகச் செயல் பட்ட மாணவர்களுக்குப் பரிசுகளும் கோப்பைகளும் வழங்கப்பட்டன.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பாக, முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார்.8 முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கு ரூ.3 இலட்சத்து 63 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .உ.முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப் கர்னல்.அருள்மொழி ஓய்வு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# தொமுச மாவட்ட தலைவர் சே.மணி பணி நிறைவு பாராட்டு விழா

வேலூர், ஜூலை 06

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக வேலூர் மண்டலம் தலைமையகத்தில் டயர் புதுப்பித்தல் பிரிவில் தொழில் நுட்ப பணியாளராக பணியாற்றி 30.06.2026 ஓய்வு பெற்ற தொமுச மாவட்ட கவுன்சில் தலைவர் லயன் சே.மணி அவர்கள் பணி நிறைவு பாராட்டு விழா வேலூரில் மாவட்ட கவுன்சில் செயலாளர் தா.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. பொருளாளர் கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகதொமுச மாநில தலைவர் நடராஜன் பொருளாளர் கோ.சி.வள்ளுவன், நிர்வாக பிரிவு செயலாளர் விஜயகுமார், மேற்பார்வையாளர் பிரிவு செயலாளர் பசுபதி, மாநில, மண்டல நிர்வாகிகள், உடன் பணிபுரிந்த தொழிலாளர்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு வேளாண்மை பல்கலை க்கழகத்தில்

# இளங்கலை மாணவ ர்கள் சேர்க்கை தரவரிசை பட்டியல் கடலூர் மாணவி மெர்லின் முதலிடம்

தஞ்சாவூர் ஜூலை 6

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை க்கழகத்தின்இளங்கலை மாணவர் சேர்க்கை தரவரிசை பட்டியலை அமைச்சர் வினோத் ரவி வெளியிட்டார்

தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங் கோட்டை டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை க்கழகத்தின் இளங்கலை மாணவர் கள் சேர்க்கை 2026 தரவரிசை பட்டியல் வெளியீட்டு விழா நடந்தது

வேளாண்மை உற்பத்தி ஆணைய ரும், அரசு செயலருமான சங்கர் மாவட்ட கலெக்டர் ரேவதி, தஞ்சாவூர் தொகுதி எம்எல்ஏ விஜய் சரவணன் ,தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பதிவாளரும் துணைவேந்தருமான பொறுப்பு சுப்பிரமணியன், இளங்கலை வேளாண்மை முதன்மையர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர் தமிழ்நாடு அரசின் வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர் வினோத் ரவி இளங்கலை மாணவர் சேர்க்கை தரவரிசை பட்டியலை வெளி யிட்டார்

பின்னர் அவர் பேசும் போது கூறியதாவது

இந்த கல்வியாண்டில் மாணவர் சேர்க்கைக்காக இணைய வழி மூலம் 14 பாடப் பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கடந்த மே மாதம் 6ம் தேதி முதல் 17ஆம் தேதி வரை வரவேற்கப்பட்டன. இதன் மூலம் மொத்தம் 26,709 விண்ணப்பங்கள் பெறப்பட்டது . அதில்24 ,435 விண் ணப்பங்கள் தகுதியானவைகளாக தேர்ந்தெடுக்கப்பட்டன. இவர்களில் 15,757 பேர் பெண்கள்

இவற்றில் அரசு கல்லூரிகளில் 2,856 இடங்களும், தனியார் இணைப்பு கல்லூரிகளில் அரசு இட ஒதுக்கீடான 3,051இடங்களும், இணைய வழி கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளன. பொது இட ஒதுக்கீட்டிற்கான தர வரிசை பட்டியலில் 22, 987 விண்ணப்ப தாரர்களும் ,தொழில் முறை கல்வி இட ஒதுக்கீட்டில் 1,193 விண்ணப்ப தாரர்களும், இடம் பெற்றுள்ளனர் இதர மாநிலத்தைச் சேர்ந்த விண் ணப்பதாரர்களின் எண்ணிக்கை 255 ஆகும்

இதில் சிறப்பு அம்சமாக தமிழ் வழியில் இளம் அறிவியல் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை ஆகிய 2 பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. தமிழ் வழியில் பயில தர வரிசைக்கு தகுதியான 24,435 மாணவர்களில் 7,664மாணவர்கள் இசைந்துள்ளனர்

சிறப்பு இட ஒதுக்கீடு அடிப்படை யில் அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் 418 இடங்களுக்கு 8,746 பேர் விண்ணப்பித்துள்ளனர் வேளாண் தொழில்கல்வி பயின்ற மாணவர்களுக்கான 5 சதவீத இட ஒதுக்கீட்டில் 239 இடங்களுக்கு1,193பேர்விண்ணப்பித்து உள்ளனர்

சிறந்த விளையாட்டு வீரர்களுக் கான இட ஒதுக்கிடான 20 இடங்க ளுக்கு190 பேர் விண்ணப்பித்தனர் முன்னாள் ராணுவத்தினருக்கான இட ஒதுக்கிடான 20 இடங்களுக்கு 170 பேர் விண்ணப்பித்துள்ளனர் மாற்றுத்திறனாளிகளுக்கான 5சதவீத இட ஒதுக்கீட்டில் 126 இடங்களும் 27 பேர் விண்ணப்பித்துள்ளனர். செயற்கைக்கான இணைய வழி கலந்தாய்வு வரும் நாட்களில் ஆரம்பிக்கப்படும் இது குறித்த விவரங்கள் https://tnau.ucanapply.comஎன்ற சேர்க்கைக்கான இணையதளத் தில் வெளியிடப்படும் இவ்வாறு அவர் கூறினார்

தரவரிசை பட்டியலில் கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே உள்ள எம் கொளக்குடியை சேர்ந்த மாணவி மர்லின் முதலிடம் பெற்றார். ஈரோடு மாவட்டம் சூரப்பட்டியை சேர்ந்த மாணவர் மாதவராஜன் இரண்டாவது இடம் பெற்றார். மேலும் முதல் 10 இடங்களில்6 மாணவிகள் இடம் பெற்று இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.



நம்பியூர் வட்டம், கூடக்கரை கிராமம், அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ குமாரர், ஸ்ரீ வள்ளி தெய்வானைசுப்பிரமணியர்ஆலயஅஷ்டபந்தனமகாகும்பாபிஷேகவிழாநடைபெற்றது. இதில் தமிழக வருவாய் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் சத்திய பாமா ஆகியோர் கலந்து கொண்டுசுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.இதில் தவெக மாவட்டச் செயலாளர் பிரதீப்குமார், நிர்வாகிகள் தம்பி சுப்பிரமணியம், சென்னை மணி (எ) ஈஸ்வரமூர்த்தி, கூடக்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சிவக்குமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலையில்

# 3 மணிநேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம்



திருவண்ணாமலை ஜூலை 6

திருவண்ணாமலையில் உலகப்புகழ்பெற்ற அண்ணாமலையார் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தமிழகம் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் வந்து அண்ணாமலையாரை வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்நிலையில், வார விடுமுறை தினமான இன்று (ஞாயிற்றுக்கிழமை) திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் பக்தர்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. அதிகாலை முதலே பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்து வருகின்றனர். அதேவேளை, கூட்டம் அதிகமாக உள்ளதால் பக்தர்கள் 3 மணிநேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.



தூத்துக்குடி, ஜூலை 6

தூத்துக்குடி மாவட்டம் கூடங்குளத்தில் உள்ள அணுமின்நிலையத்தில்ரஷியநாட்டின்நிதிஉதவியுடன் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடை பெற்று வருகிறது.

இந்நிலையில் கூடங்குளம் முதலாவது அணு உலையில் ஜெனரேட்டர் பாதுகாப்பு அமைப்பில் ஏற்பட்ட கோளாறால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கான 562 மெகாவாட் கிடைப்பதில் தற்காலிக சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இரு அணு உலைகளில் தலா 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நடைபெற்றுவரும் நிலையில் பழுது ஏற்பட்டுள்ளது. அணு உலையில் ஏற்பட்ட பழுதை சரிசெய்யும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லை, ஜூலை 6

நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி அருகே மூலச்சி கிரா மத்தைச் சேர்ந்தவர் சித்திரபுத்திரன் மகன் காளிமுத்து (வயது 40). விவசாயியான இவர் கடந்த 2ந்தேதி மாலையில் தனது மகன்கள் சின்னத்துரை (15), ஜெயராஜ் (5) ஆகியோருடன் மோட்டார் சைக்கிளில் சென்றார்.

வீரவநல்லூர் அருகே மாதுடையார்குளம் பகுதியில் சென்ற போது, அவர்களை பின்தொடர்ந்து வாகனங்களில் வந்த மர்ம கும்பல் திடீரென்று காரை காளிமுத்துவின்மோட்டார்சைக்கிளின்மீதுபயங்கரமாக மோதி இடித்து தள்ளியது.

இதில் சிறுவன் ஜெயராஜ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். காளிமுத்துவை சரமாரியாக வெட்டிக்கொலை செய்த கும்பல், அவரது தலையை துண்டித்தது. சிறுவன் சின்னத்துரையின் காலிலும் அரிவாளால் வெட்டி விட்டு கும்பல் தப்பியது. மேலும் காளிமுத்துவின் தலையை கரம்பை மெயின் ரோட்டில் வைத்து சென்றது.

நெல்லையை உலுக்கிய இரட்டைக்கொலை குறித்து வீரவநல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். கொலையாளிகளை பிடிப்பதற்காக போலீசார் 9 தனிப்படைகள் அமைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

போலீசாரின் விசாரணையில், கடந்த 2006ம் ஆண்டு உறவினர்களாக இருந்த ஒரே சமூகத்தைச் சேர்ந்த இரு குடும்பத்தி னர் தெருக்குழாயில் தண்ணீர் பிடித்தபோது ஏற்பட்டமோதல்கடந்த20ஆண்டுகளாகதொடர்வதும், இதில் இதுவரை இரு தரப்பைச் சேர்ந்த 7 பேர் கொலை செய்யப்பட்ட நிலையில், தற்போது தந்தைமகன் படுகொலை செய்யப்பட்டதும் தெரியவந்தது. இதுதொடர்பாக 11 பேர் மீது போலீசார் வழக்குப்ப திவு செய்து, தலைமறைவான அவர்களை வலைவீசி தேடினர்.

இந்த வழக்கில் தொடர்புடைய மூலச்சி கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்ற மகேஷ் (29), குமார் என்ற கொக்கி குமார் (23), ஊர்காடு பகுதியைச் சேர்ந்த முத்துச்செல்வன் (29) ஆகிய 3 பேரை போலீசார் நேற்று அதிரடியாக கைது செய்தனர்.

மேலும் தலைமறைவான 8 பேரை வலைவீசி தேடி வந்த நிலையில், தற்போது மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மணிகண்டன், ராஜதுரை, முத்துப்பட்டன், மகாலிங்கம் ஆகியோரை தனிப்படை போலீசார்கைதுசெய்துவிசாரணைநடத்திவருகின்றனர். கொலையாளிகள்அனைவரையும்கைதுசெய்தால்தான் தந்தைமகன் உடல்களை பெற்றுக் கொள்வோம் என்று குடும்பத்தினர், உறவினர்கள் தெரிவித்ததால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இதனால் அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# கிருஷ்ணகிரியில் அண்ணா தொழிற் சங்க ஆலோசனை கூட்டம்



கிருஷ்ணகிரி ஜூலை 6

அண்ணா தொழிற்சங்கத்திற்கு புதியதாக பொறுப்பேற்றுள்ள மாநிலச் செயலாளர் தமிழரசன் தமிழக முழுவதும் அண்ணா தொழிற்சங்க கூட்டங்களை நடத்தி வருகிறார். அதன்படி இன்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி இரண்டு மாவட்டங்களைஉள்ளடக்கிய அண்ணா தொழிற்சங்க கூட்டத்தை கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடத்தினார். இந்தக் கூட்டத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.எஸ்.சரவணன் தலைமை தாங்கினார்.

தர்மபுரி மண்டல போக்குவரத்து பிரிவை சேர்ந்த முருகன் வரவேற்பு உரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அசோக்குமார், அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத், மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் ராமு, தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.ஆர்.அன்பழகன், தர்மபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோகன், மேற்கு மாவட்ட செயலாளர்சீனிவாசன், தர்மபுரி அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர், அருள்சாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். அண்ணா தொழிற்சங்க பேரவை மாநில செயலாளர் தமிழரசன் துணைத் தலைவர் கோவிந்தராஜன் ஆகியோர் தொழிற்சங்கம் குறித்து ஆலோசனை வழங்கினார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அதிமுகதுணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி பல்வேறு ஆலோசனை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்கள் கேள்விக்கு பதில் அளித்த முன்னாள் அமைச்சர் கேபி முனுசாமி தாவிகாவில் இணைந்த சி விஜயபாஸ்கர் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தார் ஜாம்பவான்கள் எல்லாம் தாவைக்காவில் இருப்பதாகவும் தற்பொழுது அதிமுகவில் இருப்பவர்கள் லெட்டர் பேடுகள் என சி விஜயகுமார் விமர்சனம் செய்ததற்கு பதில் அளித்த கேபி முனுசாமி அதிமுகவின் ஒவ்வொரு தொண்டனும் ஜாம்பவான் தான். தொண்டர்களால் உருவாக்கப்பட்டவர்கள்தான் இன்று கட்சியை விட்டுச் சென்ற ஓடுகாலிகள் மற்றும் சந்தர்ப்பவாதிகள்" என்று சாடினார்.

அதிமுகவினர் 90% பேர் தமிழக வெற்றிக் கழகத்திற்கு வரப்போவதாக ஆதவ் அர்ஜுனா கூறிய கருத்து குறித்துப் பேசுகையில், "அவருக்கு கொள்கை கிடையாது; திமுக, விசிக, அதிமுக எனப் பல இடங்களுக்கு ஓடியவர் அவர். 31 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட, 2 கோடி தொண்டர்களைக் கொண்ட பேரியக்கத்தை விமர்சிக்க ஆதவ் அர்ஜுனாவிற்கு தகுதியில்லை. இனி இதுபோன்று பேசினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் படும்" என எச்சரித்தார்.

கரூர் சம்பவம் குறித்து கணக்கு தீர்க்க வேண்டி உள்ள என பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கருத்துக்கு பதில் அளித்த கே.பி.முனுசாமி அமைச்சர் பொறுப்பில் இருந்துகொண்டு ஆதவ் அர்ஜுனா காவல்துறையை மிரட்டும் பாணியில் செயல்படுகிறார். உச்ச நீதி மன்றத்தின் நேரடிப் பார்வையில், சிபிஐ வசம் இருக்கும் ஒரு வழக்கை, அமைச்சர் பொறுப்பில் இருப்பவர் இப்படி விமர்சிப்பது சாட்சிகளை அச்சுறுத்துவது போலாகும். இது வழக்கை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சியே தவிர வேறில்லை என தெரிவித்தார்.

பொதுமக்கள் நேரடியாக மனு அளிக்கலாம் என ஆளுநர் தெரிவித்த கருத்துக்கு பதில் அளித்த அவர் தலைமை பொறுப்பில் இருக்கின்ற அரசு மனுக்களின் மீது சரியான முறையில் செயல்படவில்லை எனில் ஆளுநரிடம் மனு கொடுப்பது தவறில்லை அந்த அடிப்படையில் தான் தமிழக அரசு குதிரை பேரத்தில் இறங்கி உள்ளது தனக்கு முழு பெரும்பான்மை இல்லாத காரணத்தினால் எல்லா கட்சிகளையும் உடைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது. மதிமுக தலைவர் வைகோ வெளிப்படையாக பேசியுள்ளார், நீங்கள் வாருங்கள், சட்டமன்ற உறுப்பினர் பதிவை ராஜினாமா செய்யுங்கள் நானே வெற்றி பெற செய்கிறேன் என விஜய் தெரிவித்தாக கூறியுள்ளார். அரசிடமே புகார் கூறினால் நியாயம் கிடைக்காது என்பதால் தான் ஆளுநரிடம் மனு அளிக்கிப்பட்டு உள்ளது.

அண்ணாமலை குறித்த கேள்விக்கு பதில் அளித்த கே.பி.முனுசாமி.54 ஆண்டுகால பாரம்பரியமிக்க அதிமுகவின் தொண்டன், தன் தலைவனைத் தவிர வேறு யாரையும் பார்க்க மாட்டான் நேற்று வந்த ஒரு நபருக்காக அதிமுகவில் தீர்மானம் போடுவதாகக் கூறி ஊடகங்கள் அண்ணாமலைக்கு மாயத் தோற்றத்தையும், விளம்பரத்தையும் தேடித்தருகின்றன" என்றார்.

இபிஎஸ் அவர்களின் தியாகம் மற்றும் உழைப்பைத் தொண்டர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுயநலத்திற்காகவும், அமைச்சர் பதவிக்காகவும் தவெகாவுக்கு ஓடியவர்கள் அங்கு ஏமாற்றத்தையே சந்திப்பார்கள். தவெக தலைவர் இன்னும் தன் முகத்தைக் கூடக் காட்டவில்லை. இங்கிருந்து சென்ற இரண்டாம் கட்டத் தலைவர்கள் அங்கு 'புஸ்ஸி ஆனந்த்' வாசலில் ஆட்டு மந்தையைப் போலக் காத்துக்கிடக்கிறார்கள் என்று கூறினார். நிகழ்ச்சியின் இறுதியாக டாஸ்மாக் பிரிவை சேர்ந்த சுப்ரமணி நன்றி உரையாற்றினார். இந்த கூட்டத்திற்கு அனைத்து போக்குவரத்து கழக பணிமனை நிர்வாகிகள் மின்சாரம் கூட்டுறவு சிவில் சப்ளை டாஸ்மாக் பிரிவு நிர்வாகிகள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## கம்மசமுத்திரத்தில்

# ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா

வேலூர், ஜூலை 06

வேலூர் மாவட்டம் கம்மசமுத்திரம் ஊராட்சியில் அமைந்துள்ள அரச மரத்தடி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய புனராவர்த்தன ஜீரணோத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் ஜூலை 5 ஞாயிறன்று நடைபெற்றது.

இதில் மங்கள இசை விக்னேஸ்வர பூஜை வாஸ்து சாந்தி பிரவேச பலி யாக சாலை பிரவேசம் முதற்காலையாக பூஜை மகா பூர்ணாஹூதி, இரண்டாம் கால யாக பூஜை தம்பதி சங்கல்பம் விசேஷ ஹோமங்கள் நடத்தப்பட்டு நிறைவாக கும்பாபிஷேக கலசம் புறப்பட்டு அரச மரத்தடி ஸ்ரீ முனீஸ்வரருக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் அபிஷேக ஆராதனைகள் செய்து அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

கும்பாபிஷேகத்தையொட்டி சிறப்பு அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட்டது. இரவு ஆரணி ரோஜா நாடக மன்றத்தினால் நாடகம் நடத்தப்பட்டது இதனை ஒட்டி 48 நாட்களுக்கு மண்டல பூஜையும் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகளான வி.தயாளன் வி.பாஸ்கரன், அருள்ஜோதி ஜெய்சங்கர், சங்கீதா சந்திரன், சந்தியா தேவராஜ் மற்றும் முனீஸ்வரர் ஆலய நிர்வாகிகள் உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.